# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:147** **தேதி:-04.02.2017**

***200 ரூபாய் சிம் கார்டில் OFF NET வசதிக்கான உத்தரவு வெளியாகியது மற்றும் சில மத்திய சங்க செய்திகள்***

அன்பார்ந்த தோழர்களே,

200 ரூபாய் சிம் கார்டில் OFF NET வசதி பரீட்சார்த்த அடிப்படையில் வழங்கியது நிறுத்தப்பட்டு பல மாதங்கள் ஆகிவிட்டது. அந்த வசதியை மீண்டும் ஊழியர்களுக்கு வழங்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் தொடர்ந்து வற்புறுத்தி வந்தது. மாநிலங்களில் இருந்து தகவல்கள் வரவேண்டும் என கார்ப்பரேட் அலுவலகம் முடிவு எடுக்காமல் காலதாமதப்படுத்தி வந்தது. நமது தொடர்ந்த வற்புறுத்தல் காரணமாக கார்ப்பரேட் அலுவலகம் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 200 ரூபாய் சிம்கார்டில் 50 ரூபாய்களுக்கு OFF NETல் நிரந்தரமாக பேசும் வசதிக்கான உத்தரவை 02.02.2017 அன்று வெளியிட்டுள்ளது.

**நேரடி நியமன JEக்களுக்கான உத்தரவு:-** நேரடி நியமன JEக்களை பணியமர்த்துவதில் இருந்த குழப்பம் தீர்க்கப்பட்டு அவர்களது பணி நியமனத்திற்கான உத்தரவை 01.02.2017 அன்று கார்ப்பரேட் அலுவலகம் வெளியிட்டுள்ளது. அதன் அடிப்படையில் அவர்களது சான்றிதழ்கள் பரிசோதிக்கப்பட்டு 15.04.2017க்கு முன் அவர்களை பயிற்சிக்கு அனுப்ப வேண்டும். புதியதாக் BSNL குடும்பத்தில் இணைய இருக்கும் தோழர்களை BSNL ஊழியர் சங்கம் வருக வருக என வரவேற்கிறது.

**17.07.2016 நடைபெற்ற JAO LICE தேர்வு முடிவுகளை பரிசீலித்து இறுதி முடிவுகள் அறிவிப்பு:-** 17.07.2016 அன்று நடைபெற்ற தேர்வு முடிவுகளை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் தொடர்ந்து வற்புறுத்தி வந்தது. மிகுந்த காலதாமதத்திற்கு பின் நிர்வாகம் மறு பரிசீலனை செய்து இறுதி முடிவுகளை 01.02.2017 அன்று வெளியிட்டுள்ளது.

**பிரபல கன்னட திரைப்பட நடிகர் சிவராஜ் குமார் BSNLன் சந்தாதாரர் ஆனார்:-** கன்னட திரையுலக ஜாம்பவான் டாக்டர் ராஜ்குமார் அவர்களின் புதல்வரும், பிரபல கன்னட கதாநாயகனுமான திரு சிவராஜ் குமார் 02.02.2017 அன்று BSNLன் POST PAIந சந்தாதாராக ஆகியுள்ளார். BSNL ஊழியர் சங்கத்தின் முன்னணி தோழர்களான தோழர் P.கிரிஷ் மற்றும் தோழர் R.K. ராவ் ஆகியோர் இந்த நட்சத்திர வாடிக்கையாளரை அணுகி இணைத்துள்ளனர். இந்த தோழர்களை BSNL ஊழியர் சங்கம் வாழ்த்துகிறது.

**TT மற்றும் JE க்களுக்கான இலாகா தேர்வை ONLINE மூலம் நடத்த எதிர்ப்பு:-**
TT மற்றும் JE க்களுக்கான இலாகா தேர்வை ONLINE மூலம் நடத்த கார்ப்பரேட் அலுவலகம் முனைந்துள்ளது. இதனை GM (Rectt &Trg) தெரிவித்தார். எனவே BSNL ஊழியர் சங்கம் இந்த முடிவை கடுமையாக எதிர்த்து GM(Rectt & Trg)கிற்கு ஒரு கடிதம் எழுதியுள்ளது.

**கனரா வங்கியுடனான MOU நீட்டிக்க வேண்டும்:-** ஊழியர்களுக்கு பல்வேறு கடன்களை வழங்குவதற்கு கனரா வங்கியுடன் BSNL நிறுவனம் ஏற்படுத்தியுள்ள MOU டிசம்பர் 2016 உடன் முடிவுக்கு வந்துள்ளது. எனவே இதனை நீட்டிப்பதற்கான விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென BSNL ஊழியர் சங்கம் GM(T&BFCI)ஐ கேட்டுக் கொண்டுள்ளது.

**ஹிந்தி மொழிபெயர்ப்பாளர்களை ராஜ்பாஷா அதிகாரிகளாக உயர்த்தும் வண்ணம் மறு சீரமைப்பு செய்க:-** BSNL நிர்வாகத்தில் பல காலமாக தேங்கிக் கிடக்கும் கோரிக்கையான இளைய மற்றும் மூத்த ஹிந்தி மொழி பெயர்ப்பாளர்களுக்கு ராஜ்பாஷா அதிகாரிகளாக பதவி உயர்வு பெறும் வண்ணம் அந்த கேடர்களை மறு சீரமைப்பு செய்ய வேண்டும் என்பதை மேலும் காலதாமதமின்றி உடனடியாக தீர்வு காண வேண்டும் என நமது மத்திய சங்க தலைவர்கள் திரு ந.சக்கரவர்த்தி PGM(Pers) அவர்களை சந்தித்து வலியுறுத்தி உள்ளனர். இதற்கான முன்மொழிவை தொலை தொடர்பு துறைக்கு அனுப்பியதாகவும், அது சில விளக்ககங்களை கேட்டு திரும்ப வந்துள்ளதாகவும், அவை தயாராகிக் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். விரைவில் பதில் அனுப்பி தொலை தொடர்பு துறையின் ஒப்புதல் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் உறுதி அளித்துள்ளார்.

**ரிலையன்ஸ் ஜியோவின் கட்டண சலுகைகளுக்கு TRAI நற்சான்றிதழ் வழங்கியுள்ளது:-** தன்னுடைய பொருளாதார பலத்தை வைத்துக் கொண்டு, இந்தியாவின் மிகப்பெரிய பணக்காரரான முகேஷ் அம்பானி BSNL உள்ளிட்ட அனைத்து தொலை தொடர்பு நிறுவனங்களையும் அழிக்க நினைக்கிறார். அனைத்து நிறுவனங்களையும் ஒழித்த பின் அதிக கட்டணம் மூலமாக மக்களை கொள்ளையடிக்க திட்டமிட்டுள்ளார். ரிலையன்ஸ் ஜியோ அறிவித்துள்ள இலவச குரல் அழைப்புகள் மற்றும் டேட்டாக்கள் என்பது சூறையாடுவதற்கான கட்டணமே. முதலில் ரிலையன்ஸ் ஜியோ ”WELCOME OFFER” என முதலில் தெரிவித்தது. இது போன்ற சலுகைகள் நவம்பர் 5ஆம் தேதி முதல் 90 நாட்களுக்கு மட்டுமே என அறிவித்தது. மீண்டும் புத்தாண்டு சலுகை என்ற பெயரில் மார்ச் 31ஆம் தேதி வரை நீட்டித்தது. இது வேறு பெயரில் வழங்கப்படும் முதலில் கொடுக்கப்பட்ட சலுகையின் தொடர்ச்சியே. இது சட்ட மீறலே. ஆனால் இந்த புத்தாண்டு சலுகை என்பது ஆரம்பத்தில் வழங்கப்பட்ட “WELCOME OFFER”ன் தொடர்ச்சி அல்ல என TRAI தெரிவித்துள்ளது. இது அரசாங்கம் மற்றும் ஒழுங்குமுறை ஆணயத்தின் மீது ரிலையன்ஸ் ஜியோ கொண்டுள்ள செல்வாக்கையே காட்டுகிறது.

**பங்கு விற்பனை மூலம் 72,500 கோடி ரூபாய்களை திரட்ட மோடி அரசாங்கம் திட்டம்:-** அடுத்த நிதியாண்டில் பொதுத்துறை நிறுவனங்களின் பங்கு விற்பனை மூலம் 72,500 கோடி ரூபாய்களை திரட்ட மோடி அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இந்த நிதியாண்டில் திட்டமிட்டுள்ள 45,000 கோடி ரூபாய்களை விட இது கிட்டத்தட்ட இரட்டிப்பானது. இது BSNL உள்ளிட்ட பொதுத்துறைகளின் மீது தொடுக்கப்பட்டுள்ள கடுமையான தாக்குதலாகும். ஏற்கனவே பொது காப்பீட்டு நிறுவனங்களின் பங்கு விற்பனை மூலம் 11,000 கோடி ரூபாய்களை திரட்ட அரசாங்கம் முடிவெடுத்துள்ளது. உழைக்கும் வர்க்கம் ஒன்று பட்டு இந்த தாக்குதலை தடுத்து நிறுத்த வேண்டும்.

**தொழிலாளர் நலச்சட்டங்கள் விரைவில் அமுலபடுத்தப்படும் என நிதிநிலை அறிக்கை:-** நிதி அமைச்சர் அருண் ஜெட்லி அவர்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிதி நிலை அறிக்கையில் குறைந்த பட்ச கூலியை மாதமொன்றிற்கு 18,000 ரூபாயாக உயர்த்த வேண்டும் என்கின்ற தொழிற்சங்கங்களின் கோரிக்கை தொடர்பாக ஏதும் தெரிவிக்கவில்லை. இந்திய உழைக்கும் மக்களின் 90 சதவிகிதமாக உள்ள அணி திரட்டப்படாத தற்காலிக தொழிலாளர்களின் ஊதியம் மிக மிகக் குறைவாக உள்ளது. குறைந்த பட்ச ஊதியத்தை 18,000ஆக உயர்த்துவது தொழிலாளர்களுக்கு உதவும்

என்பதோடு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் ஒரு உந்து சக்தியாக இருக்கும். ஏனெனில் மிகபெருமளவிலான தொழிலாளர்களின் ஊதிய உயர்வு என்பது பொருட்களின் தேவைகளையும் அதிகரிக்க செய்யும். ஆனால் இது தொடர்பாக நிதி நிலை அறிக்கையில் ஏதும் தெரிவிக்கப்படவில்லை. ஆனால் தொழிலாளர் நலச்சட்ட திருத்தங்களை கொண்டு வர அரசாங்கம் வேகமாக நடவடிக்கை எடுக்கும் என நிதி நிலை அறிக்கை தெரிவிக்கிறது. தொழிலாளர் நல சட்டங்கள் மிக கடுமையாக இருப்பதால், முதலீட்டாளர்களுக்கு சாதகமாக திருத்தங்கள் கொண்டு வர வேண்டும் என இந்திய மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் அரசாங்கத்திடம் கூறி வருகின்றனர். இந்த சட்டங்கள் காலாவதியாகி விட்டதால் இவற்றை மாற்ற வேண்டும் என அவர்கள் கூறுகின்றனர். எனினும் இந்திய தொழிலாளி வர்க்கத்தின் கடுமையான எதிர்ப்பின் காரணமாக இந்த திருத்தங்களை அரசாங்கத்தால் செய்ய இயலவில்லை. தற்போது தொழிலாளர் நலச்சட்ட திருத்தங்களை அரசாங்கம் விரைவாக கொண்டு வரும் என நிதி நிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பொதுத்துறை நிறுவன தொழிற்சங்கங்களின் தேசிய கருத்தரங்கத்தின் அறைகூவல்:-**
29.01.2017 அன்று அனைத்து பொதுத்துறை நிறுவன தொழிற்சங்கங்களின் தேசிய கருத்தரங்கம் பெங்களூருவில் நடைபெற்றது. அந்த கருத்தரங்கம் பல்வேறு கோரிக்கைகளுக்காக கீழ்கண்ட இயக்கங்களை நடத்துவது என தீர்மாணித்துள்ளது.

**<u>கோரிக்கைகள்</u>**

1) பொதுத்துறை பங்குகள் விற்பனையை அனுமதியோம்.
2) பொதுத்துறைகளின் கேந்திர பங்குவிற்பனையை அனுமதியோம்.
3) பகுதியாகவோ, மொத்தமாக பொதுத்துறைகளை தனியார்மயமாக்க அனுமதியோம்.
4) BIFR மற்றும் AIFR நிறுவனங்கள் கலைக்க அனுமதியோம்.
5) நலிவடைந்த பொதுத்துறை நிறுவனங்களை பலமான பொதுத்துறைகளாக மாற்ற வேண்டும்.
6) எதிர் வரும் ஊதிய பேச்சு வார்த்தைகளை கணக்கில் கொண்டு தொழிற்சங்கங்களின் கூட்டு பேர உரிமையை உறுதி செய்ய வேண்டும்.

**<u>இயக்கங்கள்</u>**

1) பிப்ரவரி 28க்குள் நிறுவனங்கள் வாரியாக தலமட்ட, மண்டல, தேசிய கருத்தரங்கங்களை நடத்துவது.
2) சுற்றறிக்கை வெளியிடுவது, தர்ணா, வாயில் கூட்டங்கள், உணவு இடைவேளை ஆர்ப்பாட்டங்களை மார்ச் 20க்குள் நடத்துவது.
3) மார்ச் 30ஆம் தேதி கருப்பு அட்டையணிந்து ஆர்ப்பாட்டம்/தர்ணா மூலமாக அகில இந்திய எதிர்ப்பு தினம் கடைபிடிப்பது.
4) எதிர்வரும் பாராளுமன்ற பட்ஜெட் தொடரின் இரண்டாவது பகுதியில் டெல்லியில் தேசியக் கருத்தரங்கம் நடத்துவது.
5) பொருத்தமான நேரத்தில் முடிவெடுத்து அறிவிக்கப்படும் தேதியில் தேசந்தழுவிய வேலை நிறுத்தத்திற்கு தயாராவது.

பொதுத்துறை நிறுவன தொழிற்சங்கங்களின் கருத்தரங்க முடிவுகளை சக்தியாக அமலாக்குவோம்.

**ஏர்செல் மேக்சிஸ் வழக்கிலிருந்து மாறன் சகோதரர்கள் விடுவிப்பு:-** முன்னாள் மத்திய தொலை தொடர்பு அமைச்சர் தயாநிதி மாறன் மற்றும் அவரது சகோதரர் கலாநிதி மாறன் மற்றும் அனைவரும் குற்றமற்றவர்கள் என CBI நீதி மன்றம் 02.02.2017 அன்று தீர்ப்பு வழங்கியுள்ளது. 2004 முதல் 2007வரை மத்திய தொலை தொடர்பு அமைச்சராக தயாநிதி மாறன் இருந்தார். அந்த சமயத்தில் தன்னிடம் இருந்த ஏர்செல்லின் பங்குகளை அனந்தகிருஷ்ணனுக்கு சொந்தமான மலேசிய நிறுவனமான மேக்சிஸ் நிறுவனத்திற்கு விற்க தயாநிதி மாறன் வற்புறுத்தினார் என ஏர்செல்லின் வளர்ச்சி அதிகாரியாக இருந்த சிவசங்கரன் CBIயில் ஒரு புகார் கொடுத்திருந்தார். இதற்காக இரண்டு மொரீசியஸ் நிருவனங்கள் மூலமாக தயாநிதி மாறனுக்கு 742 கோடி ரூபாய்கள் கொடுத்ததாக அமலாக்க பிரிவு குற்றம் சாட்டியது. எனினும், குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு எதிராக எந்த ஒரு முகாந்திரமும் இல்லை என CBI நீதி மன்றம் தெரிவித்துள்ளது. இந்த CBI நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து மேல் முறையீடு செய்ய இருப்பதாக அமலாக்க பிரிவு கூறியுள்ளது. வலுவான ஆதாரங்கள் உள்ள இது போன்ற பிரச்சனையில் விசாரணை ஏதும் இன்றி CBI நீதிமன்றம் விடுவித்துள்ளது அபத்தமானது என பிரபல வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் கூறியுள்ளார்.

**சொத்துக் குவிப்பு வழக்கில் குஜராத மாநில முன்னாள் AGMக்கு CBI நீதிமன்றம் தண்டனை:-** அஹமதாபாத்தில் உள்ள ஒரு சிறப்பு CBI நீதிமன்றம் சொத்துக் குவிப்பு வழக்கில் மூன்றாண்டு சிறை தண்டனையும், 27 லட்ச ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்பளித்துள்ளது. குஜராத் மாநிலம் பவநகரில் AGMஆக பணியாற்றிக் கொண்டிருந்த கிரண் பிரேம்சந் படேல் ஜனவரி 1997லிலிருந்து 2004 ஜனவரி வரை அவருடைய வருமானத்திற்கு மேல் 29.84 லட்ச ரூபாய், அதாவது 148 சதவிகிதம் சொத்து வைத்திருந்ததாக தண்டிக்கப்பட்டுள்ளதாக CBI அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**